மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா விவசாயிகளுக்கும் அரசினுடைய மானியமோ, இடுபொருளோ அல்லது பூச்சிமருந்தோ கிடைப்பதில்லை. ஏறத்தாழ இதில் 17 சதவீத மக்களுக்குத்தான் விவசாயத்திற்குத் தருகிறோம். அதிலும் சிறு குறு விவசாயிகளுக்கும் தருகிறோம். மொத்த சிறு குறு விவசாயிகளில் 17-லிருந்து 20 சதவீத மக்களுக்கு மட்டுமே தரப்படுகிறது. எனவே தோட்டக் கலைத் துறையின் சார்பாகத்தான் முந்திரிக் காடுகள் பராமரிக்கப்படுகின்றன. அதற்குரிய தொழில்நுட்பங்கள், மருந்துகள் இவையெல்லாம் தரப்படுகின்றன. எனவே இவை விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 171, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

171—

பால் உற்பத்தியாளர்களுக்கு நட்டம் ஏற்படுவதைத் தடுத்தல்

**32973—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க செயலாளர்கள் செய்யும் முறைகேடுகளினால் உற்பத்தியாளர்களுக்கு நட்டம் ஏற்படுவதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) 1992-93-இல் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் எத்தனை பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கொழுப்பு சத்து அடிப்படையில் கொள்முதல் செய்யும் பாலில் எவ்வித முறைகேடும் நடக்காமலும், அதனால் உற்பத்தியாளர்களுக்கு எவ்வித நட்டமும் ஏற்படாமலும் இருக்க பால் பரிசோதனை முறை சரியாக நடக்கிறதா என்று கண்காணிக்க விரிவாக்க அலுவலர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. சங்க கணக்குகள் மாதாமாதம் காரியதரிசிகளின் கூட்டத்தில் முதுநிலை ஆய்வாளரால் சரிபார்த்து

துணைப் பதிவாளர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. இவ்வித நடவடிக்கைகளால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் நட்டம் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

(ஆ) 1992-93-ம் ஆண்டில் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 14 சங்கப் பணியாளர்கள் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள், குறிப்பாக ஏழை பெண்கள், பால் சங்கத்திற்கு பாலை ஊற்றும்போது, பால் அளவு குறைந்து விட்டது, பால் கெட்டு விட்டது, திரிந்து விட்டது, தயிராகி விட்டது, பாலினுடைய கொழுப்பு சத்து குறைந்து விட்டது என்றெல்லாம் ஒரு காலத்தில் பிரச்சினை இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 14 பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திறமையான ஆட்சியின் கீழே துறை அமைச்சருடைய சீரிய முயற்சியில் நடவடிக்கை எடுப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இப்படி நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய வழிமுறைகளை உறுப்பினர்களுக்கு துறை அளிக்குமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஏற்றாற்போல அதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாபத்திலே இயங்குகிற பால் சங்கங்களின் உபரி பணத்தையும் பால் சங்க உறுப்பினர்களையும், குறிப்பாக பெண் உறுப்பினர்களையும் சிறு சேமிப்பில் முதலீடு செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் இயங்கக் கூடிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் இன்று பல சங்க செயலாளர்கள் முறைகேடு செய்து 14 பேர்களை விலக்கியதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் நடந்த நிகழ்வுகளை - மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன் - பல கோடி ரூபாய் சொத்து இருந்ததையெல்லாம் அவர்கள் முறைகேடாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது சர்சார்ஜ் கேஸ் போட்டு இழந்திருக்கக் கூடிய அந்த நட்டத்தை உடனடியாக மீட்பதற்கும், பால் உற்பத்தியாளர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா அல்லது நீதி விசாரணைக்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்கு? நடவடிக்கை எடுத்ததற்காகவா நீதி விசாரணை?

மாண்புமிகு திரு.தே.ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

172—

கற்கள் கடத்தப்படுவதை தடுத்தல்

**78609—திரு. க. அர்ச்சுனன்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சங்ககிரிப் பகுதியில் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டு சேலத்திற்கு கடத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,